செ.வெ.எண்:1000 நாள்-12.11.2010

# பத்திரிக்கை செய்தி

## இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்காக 14–11–10 போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம்

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் பல்ஸ் போலியோ சிறப்பு முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டதாலும், ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முறையான தவணைகளில் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வந்ததாலும் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக போலியோ நோயினால் எந்தக் குழந்தையும் பாதிக்கப்படவில்லை. இது ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இருந்த போதிலும், வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வேலை தேடி வருவோர் குழந்தைகள் மூலம் இந்த நோய் பரவும் அபாயம் இருந்து வருகிறது.

வேலை நிமித்தமாக இடம் பெயர்ந்து வாழ்வோரின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் அதிகரித்துக் கொண்டே உள்ளது. இவ்வாறு அடிக்கடி இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்கு சரியான தவணைகளில் தடுப்பு மருந்துகள் கிடைக்கப் பெறுவதில்லை. அதன் காரணமாக அக்குழந்தைகள் போலியோ போன்ற கொடிய நோய் பாதிப்புக்கு ஆளாகுவதோடு, நோய் பரவவும் ஏதுவாகிறார்கள்.

இது மாதிரியான இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்கு போலியோ நோய்க்கு எதிரான தடுப்பு சக்தியை உருவாக்குவதற்காக வருகின்ற 14–11–2010 ஞாயிறன்று முதல் தவணையும், அடுத்த மாதம் 12–12–2010 ஞாயிறன்று இரண்டாம் தவணையும் கொடுப்பதற்காக தமிழகம் முழுவதும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான், பல்ஸ்போலியோ முகாமின்போது சொட்டு மருந்து வழங்குவதோடல்லாமல், இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்காக கூடுதலாக இரண்டு தவணைகள் போலியோ சொட்டு மருந்து ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதனை செயல்படுத்துவதற்காக கீழ்கண்ட பகுதிகளில் இடம் பெயர்ந்து வாழ்வோர் குழந்தைகள் கணக்கெடுப்பும் வரைபடமும் தயார் செய்யப்பட்டுள்ளது.

1. கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடம், மேம்பாலம், தொழிற்சாலை, நெடுஞ்சாலை, இரயில்வே பணிகள்.
2. செங்கற்சூளை.
3. நரிக்குறவர் தங்குமிடம்.
4. வேளாண் தொழிலாளர் வசிப்பிடம்.
5. மீன்பிடித் தொழிலுக்காக இடம் பெயர்ந்து வாழும் மீனவ பகுதி.
6. சாலையோர குடியிருப்புகள்.
7. வாத்து மற்றும் ஆடு மேய்ப்பவர்.
8. இலங்கை அகதிகள்.

இந்த போலியோ சிறப்பு முகாம்களில் ரோட்டரி போன்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தினரும் ஈடுபடுகின்றனர்.

இந்த முகாம் வாயிலாக ஏறக்குறைய 50,000 இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9